2020 செப்டம்பர் 14]

2016–2019 ஆகிய ஆண்டுகளில் நாங்குநேரி தொகுதியிலிருந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 2019 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மக்களவைத் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றியவரும், தனது தொகுதி மக்களுக்குத் தொண்டு செய்வதில், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவருமான திரு. H. *வசந்தகுமார் அவர்கள் 28–8–2020 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

இப்பெருந்தகையின் மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

(ஈ) கொரோனா வைரஸ் நோய்த் தொற்று காரணமாக உயிரிழந்தவர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *"உலகையே ஆட்டிப் படைக்கும் கொரோனா வைரஸ் பெருந்தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

தங்களது இன்னுயிரையும் துச்சமெனக் கருதி, கொரோனா தடுப்புச் சேவையில் ஈடுபட்ட மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த ஊழியர்கள் அனைவரின் சேவை எந்நாளும் நினைவுகூரத்தக்கது.

இக்கொடிய நோய்த் தொற்றின் காரணமாக உயிரிழந்தவர்களுக்கும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது உயிரிழந்த முன்களப் பணியாளர்களுக்கும் அஞ்சலியை தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது தங்கள் இன்னுயிரை இழந்த முன்களப் பணியாளர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மற்றும் கொரோனா வைரஸ்

நோய்த் தொற்றின் காரணமாக உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (15–9–2020), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10–16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

– – – – –